ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ மாணிக்கங்கட்டி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாணிக்கங்கட்டி ॥

## திருத்தாலாட்டு

‡மாணிக்கம் கட்டி⋆ வயிரம் இடை கட்டி⋆
    ஆணிப் பொன்னால் செய்த⋆ வண்ணச் சிறுத் தொட்டில்⋆
பேணி உனக்குப்⋆ பிரமன் விடுதந்தான்⋆
    மாணிக் குறளனே! தாலேலோ!⋆
வையம் அளந்தானே! தாலேலோ! (1)

உடையார் கனமணியோடு⋆ ஒண் மாதுளம்பூ⋆
    இடை விரவிக் கோத்த⋆ எழில் தெழ்கினோடு⋆
விடை ஏறு காபாலி⋆ ஈசன் விடுதந்தான்⋆
    உடையாய்! அழேல் அழேல் தாலேலோ!⋆
உலகம் அளந்தானே! தாலேலோ! (2)

என் தம்பிரானார்⋆ எழில் திருமார்வர்க்கு⋆
    சந்தம் அழகிய⋆ தாமரைத் தாளர்க்கு⋆
இந்திரன் தானும்⋆ எழில் உடைக் கிண்கிணி⋆
    தந்துவனாய் நின்றான் தாலேலோ!⋆
தாமரைக் கண்ணனே! தாலேலோ! (3)

சங்கின் வலம்புரியும்⋆ சேவடிக் கிண்கிணியும்⋆
    அங்கைச் சரிவளையும்⋆ நாணும் அரைத்தொடரும்⋆
அங்கண் விசும்பில்⋆ அமரர்கள் போத்தந்தார்⋆
    செங்கண் கருமுகிலே! தாலேலோ!⋆
தேவகி சிங்கமே! தாலேலோ! (4)

எழில் ஆர் திருமார்வுக்கு⋆ ஏற்கும் இவை என்று⋆
    அழகிய ஐம்படையும்⋆ ஆரமும் கொண்டு⋆
வழுவில் கொடையான்⋆ வயிச்சி ராவணன்⋆
    தொழுதுவனாய் நின்றான் தாலேலோ!⋆
தூமணி வண்ணனே! தாலேலோ! (5)

ஓதக் கடலின்⋆ ஒளிமுத்தின் ஆரமும்⋆
    சாதிப் பவளமும்⋆ சந்தச் சரிவளையும்⋆
மா தக்க என்று⋆ வருணன் விடுதந்தான்⋆
    சோதிச் சுடர் முடியாய்! தாலேலோ!⋆
சுந்தரத் தோளனே! தாலேலோ! (6)

கான் ஆர் நறுந்துழாய்⋆ கைசெய்த கண்ணியும்⋆
    வான் ஆர் செழுஞ்சோலைக்⋆ கற்பகத்தின் வாசிகையும்⋆
தேன் ஆர் மலர்மேல்⋆ திருமங்கை போத்தந்தாள்⋆
    கோனே! அழேல் அழேல் தாலேலோ!⋆
குடந்தைக் கிடந்தானே! தாலேலோ! (7)

கச்சொடு பொற்சுரிகை⋆ காம்பு கனகவளை⋆
    உச்சி மணிச்சுட்டி⋆ ஒண் தாள் நிரைப் பொற்பூ⋆
அச்சுதனுக்கென்று⋆ அவனியாள் போத்தந்தாள்⋆
    நச்சுமுலை உண்டாய்! தாலேலோ!⋆
நாராயணா! அழேல் தாலேலோ! (8)

மெய் திமிரும் நான⋆ பொடியோடு மஞ்சளும்⋆
    செய்ய தடங்கண்ணுக்கு⋆ அஞ்சனமும் சிந்துரமும்⋆
வெய்ய கலைப்பாகி⋆ கொண்டு வளாய் நின்றாள்⋆
    ஐயா! அழேல் அழேல் தாலேலோ!⋆
அரங்கத்தணையானே! தாலேலோ! (9)

‡ வஞ்சனையால் வந்த⋆ பேய்ச்சி முலை உண்ட⋆
    அஞ்சன வண்ணனை⋆ ஆய்ச்சி தாலாட்டிய⋆
செஞ்சொல் மறையவர் சேர்⋆ புதுவைப் பட்டன் சொல்⋆
    எஞ்சாமை வல்லவர்க்கு⋆ இல்லை இடர்தானே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥